விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 265 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 25 புதன்கிழமை (10.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நேபாள அரசுக்கு எதிராகப் போராட்டம்



- நேபாளப் பிரதமர், ஜனாதிபதி இராஜினாமா.
- ஆர்ப்பாட்டத்தில் 40க்கும்மேற்பட்டோர்உயிரிழப்பு.
- நேபாள உயர்நீதிமன்றுக்குத் தீவைப்பு.

(16ஆம் பக்கம் பார்க்க)

மனிதப் புதைகுழிகள் தொடர்பில்

## சர்வதேச தரத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம்

### ஜெனிவா அமர்வில் பிரிட்டன் வலியுறுத்து



(ஜெனிவா)

இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் குறித்த விசாரணை மிகவும் முக்கியத்துவம்

15ஆம் பக்கம் பார்க்க

## வரணியில் இளைஞன் மீது தாக்குதல்

### ஒருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதி

15ஆம் பக்கம் பார்க்க

## கலட்டியில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலட்டிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹயஸ் ரக வாகனத்தில் வந்த கும்பல் ஒன்று, மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த

02ஆம் பக்கம் பார்க்க

# அனைவரையும் உள்ளடக்கிய அதிகாரப் பகிர்வு அவசியம்



## ஜெனிவாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனிவா)

- 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
- மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும்.
- தமிழ் மக்களின் அபிலாஷை மற்றும் கௌரவத்தை இந்தியா எப்போதும் வலியுறுத்தும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

நாய்களுக்கு இலவசக் கருத்தடை

## கட்டாக்காலி நாய்களைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு நாய்க்கு 600 ரூபாய் வீதம் சன்மானம்

### நல்லூர்ப் பிரதேச சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச சபைக் குட்பட்ட பெண் நாய்களுக் கான இலவசக் கருத்தடை சிகிச்சை முகாமிற்கு சமூக நல நோக்கில் பெண் கட்டாக் காலி நாய்களைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு நாய்க்கு 600 ரூபாய் வீதம் சன்மானம் வழங்கப்படும் என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் இலங்கைக்கு 43 நாடுகள் ஆதரவு

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது அமர்வில் நடைபெற்ற ஊடாடும் உரையாடல் நிகழ்வில் பேசிய சுமார் 43 நாடுகள் இலங்கையுடன் ஒற்றுமையைவெளிப்படுத்தியதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்

15ஆம் பக்கம் பார்க்க

## அரசியலமைப்பு மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும்



### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும். அரசியலமைப்பு திருத்தத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்

02ஆம் பக்கம் பார்க்க

## ஹெரோயின், ஐஸ் போதை யாழில் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் யாழ். குருநகர்ப் பகுதியில் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 110 மில்லி கிராம் ஹெரோயின் 30 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அவர்கள் நால்வரும் 18, 21, 22 மற்றும் 23 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

100

1925 2025

நூற்றாண்டு விழா

2025.09.04

**பழைய மாணவர் சங்கம் பெருமையுடன் நடாத்தும் நூற்றாண்டு விழாவும் நூற்றாண்டு மலர் வெளியீடும் - 2025**

காலம் :- 2025.09.10 புதன்கிழமை

நேரம் :- காலை 09.05 மணி

இடம் :- வித்தியாலய வளாகம்

**தலைவர்**
**வித்தியாலய பழைய மாணவன்**
**திரு. வை.விமலன்**
(வித்தியாலய முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
**வித்தியாலய பழைய மாணவன்**
**வைத்திய கலாநிதி ஞா. காந்திஜி**
(பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணர்)

**சிறப்பு விருந்தினர்**
**கலாநிதி க. மணிமார்பன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம்)

**கௌரவ விருந்தினர்கள்**
**வித்தியாலய பழைய மாணவன்**
**லயன் தி. உதயசூரியன்**
(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்)

**வித்தியாலய பழைய மாணவன் திரு. தே. மோகனராஜா**
(ஆசிரியர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

**வித்தியாலய பழைய மாணவி திருமதி க. கயல்விழி**
(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காரைநகர்)

**வித்தியாலய பழைய மாணவன்**
**திரு. து. சிவகுமார்**
உரிமையாளர், சிவம் களஞ்சியம்

### நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்துவருதல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தேசியக்கொடியேற்றல்
- தேசியக் கீதம் இசைத்தல்
- பாடசாலைக் கொடியேற்றல்
- பாடசாலைக் கீதம் இசைத்தல்
- தமிழ்மொழி வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை சிவஸ்ரீ சு. ஸ்ரீரங்கநாத குருக்கள் (வித்தியாலய பழைய மாணவர்)
- வரவேற்புரை திருமதி ம.நீதிமதி (வித்தியாலய பழைய மாணவி)
- தலைமை உரை
- ஆசான்கள் கௌரவிப்பு
- நூற்றாண்டு மலர் வெளியீடு
- முதற் பிரதி வழங்கல்
- மலர் ஆய்வுரை. வாழ்நாட் பேராசிரியர் வ. மகேஸ்வரன்
- நூல் அனுசரனையாளர் திரு. து .சிவகுமார் கௌரவிப்பு
- சிங்கள அபிநயப்பாடல் (பாடசாலை மாணவர்கள்)
- ஆசான்கள் கௌரவிப்பு
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவிப்பு நிகழ்வு
- கௌரவ விருந்தினர் உரை
- கிராமியக் கதம்பம் (பாடசாலை மாணவர்கள்)
- பிரதமர் விருந்தினர் உரை
- நன்றியுரை திரு. மு.பாபுஜி (விழாக்குழு செயலாளர்)
- இசை நாடகம் - வள்ளி திருமணம் (நாட்டார் வழக்கியற்கழகம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பாடசாலைச் சமூகம்


விளம்பர அனுசரனை
புவனேஸ்வரி என்றபிறைஸ்
பண்ணாகம். 0778169757 ஜெ.டினோஜானன்

(5368)



## பிறப்பும் இறப்பும் கடவுள் அருள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
10.05.1970

மறைவு
13.08.2025

**கடந்த 13.08.2025 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்**

## அமரர் துரைராசா சாந்திக்குமார்

**(சாந்தன் வெல்டிங் வேக் சொப் உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 10.09.2025 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர் வரும் 12.09.2025 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

(5360)

*இங்ஙனம் :* **குடும்பத்தினர்**
மனைவி சாந்திக்குமார் சகுந்தலாதேவி
மகள்மார் [illegible]
அத்தான் அக்கா [illegible] கருணா தேவி

குட்டியப்புலம்,
வசாவிளான்.
077 935 2412, 077 968 7683


## கலட்டியில்...

நபரை மோதி விழுத்திவிட்டு அவர்மீது வாள்வெட்டு தாக்குதலை நடாத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞனே வாள்வெட்டில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33,104)

## அனைவரையும்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. தொடக்க அமர்வில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதத்தில் கருத்துரைத்த இந்தியப் பிரதிநிதி, 2009 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கும், மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்ததாகச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையுடன் தமிழ்மக்களின் அபிலாஷைகளான சமத்துவம், நீதி மற்றும் கௌரவத்தை இந்தியா எப்போதும் வலியுறுத்திவருவதாகத் தெரிவித்த அவர், நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், மாகாணசபைத்தேர்தல்களை உடனடியாக நடாத்துமாறும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்துவதாகக் கூறினார். மேலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

அத்தோடு சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் அவர் குறிப்பிட்டார்.(ம-7)


## தேவை

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள எமது கட்டிடத்திற்கு
**வெல்டர், மரவேலை தெரிந்தவர் மேசன் மற்றும் தொழிலாளி**
தேவை.

(5370)

**077 953 0496**


## அரசியலமைப்பு...

களத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்வைத்த கொள்கை பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அரசியலமைப்பு திருத்தத்தின் போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் எமக்கு ஆணையை வழங் கியிருக்கின்றனர். எனினும் அரசியலமைப்பு திருத்தத்துக்கான நடவடிக்கைகளை நாம் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்றார். (ம-7)


## வேலைவாய்ப்பு

**யாழ். நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு துப்பரவுப் பணியாளர்கள் பூங்கன்று பராமரிப்பாளர்கள்**
தேவை. ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்.

**077 800 1214**

(C-3843)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை மாற்றும் வீதி விபத்துக்கள்

## நாளொன்றில் நாலிருவர் பலி

**(கொழும்பு) வீதி விபத்துக்களால் நாள் ஒன்றிற்கு 8 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் 2025 செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 1870 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

வீதி விபத்துக்கள் தொடர்பான அறிக்கையிடலிலேயே மேற்கண்ட தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இக்காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 1757 விபத்துக்கள் நேர்ந்துள்ளதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாரதிகள், பாதசாரிகள் மற்றும் பயணிகள் உள்ளிட்ட அனைவரும் போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்க வேண்டுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அண்மையில் எல்ல-வெல்லவாயப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 15 பேர் பலியாகியதுடன் 17 பேர் வரை படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# முன்னாள் அமைச்சர்களின் இல்லங்கள் அரச திணைக்களங்களாக மாற்றம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு) முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய 50 உத்தியோகபூர்வ இல்லங்களை எதிர்காலத்தில் அரச நிறுவனங்கள் அல்லது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லங்களை அரச நிறுவனங்களின் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் கொழும்பில் உள்ள மலலசேகர மாவத்தை மற்றும் கெப்பட்டிபொல வீதியில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஆய்வு செய்தனர்.

இதன் பின்னரே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்ட கருத்தை தெரிவித்திருந்தார். (க-8)


# விவசாயத்துறையை விஸ்தரிக்க உலக வங்கி உத்வேகம்

## 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு) கிராமப்புற வாழ்வாதாரங்களை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வேளாண் உணவுத் துறையில் காலநிலை மீள்தன்மையை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கை அரசாங்கமும் உலக வங்கி குழுமமும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த திட்டத்தால் இலங்கை முழுவதும் 3இலட்சத்து 80ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைய உள்ளனர். இந்தத் திட்டம் 8ஆயிரம் வேளாண் உணவு உற்பத்தியாளர்களை நேரடியாக சென்றடையும் அதே வேளை, 71ஆயிரம் ஹெக்டேயர் நிலத்தில் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் சேவைகளை மேம்படுத்தும், மேலும் அறுவடைகளை அதிகரிக்கும் மற்றும் இழப்புகளைக் குறைக்கும் நவீன, காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகளை சிறு விவசாயிகள் பின்பற்ற உதவும். வேளாண் வணிக மதிப்புச் சங்கிலிகளை வலுப்படுத்துவதன் மூலமும், சந்தை அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமும், கிராமப்புறங்களில், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயிர் விளைச்சலை அதிகரிக்கவும் இழப்புகளைக் குறைக்கவும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதையும், பயிர் காப்பீட்டிற்கான அணுகலை விரிவுபடுத்துவதையும், காலநிலை தொடர்பான சவால்களை விவசாயிகள் சிறப்பாகச் சமாளிக்க உதவும் வகையில் காலநிலை-எதிர்ப்பு உட்கட்டமைப்பில் முதலீடு செய்வதையும் இத் திட்டத்தினூடாக ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், இலங்கையின் விவசாயத் துறைக்கு உலக வங்கி குழுமம் அளித்த ஒரு தசாப்தத்திற்கும் மேலான ஆதரவின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவித்தார். (க-8)




# நீதிபதி பயணித்த வாகனத்தை காணொளி எடுத்த நபருக்கு விளக்கமறியல்!

(கொழும்பு) நீதிபதி பயணித்த வாகனத்தை காணொளி எடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை இன்று 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான பொலிஸ் அதிகாரிகள், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், காணொளி எடுத்த கையடக்கத் தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் ஒப்படைத்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனை கருத்தில் கொண்ட நீதவான் சந்தேக நபர் காணொளி எடுத்த கையடக்கத் தொலைபேசியை அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் ஒப்படைத்து அறிக்கை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளார்.

சந்தேக நபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கோருவதாகவும் அவரை பிணையில் விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்தார். எனினும் சந்தேக நபரை எதிர்வரும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (க-8)

# ராஜிதவுக்குப் பிணை

(கொழும்பு) முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ராஜித சேனாரத்ன நேற்றைய தினம் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ராஜித சேனாரத்னவை 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்க பிணை மற்றும் 02 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதவான் நீதிமன்றில் கடந்த ஒகஸ்ட் 29 ஆம் திகதி காலை ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை நீக்கம் சட்டத்திற்கு முரணானதல்ல உயர் நீதிமன்றம்



(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்தை (சிறப்புரிமை) நீக்கும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல, சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றலாம் என்ற உயர்நீதி மன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, இச்சட்டமூலம் அரசியலமைப்பின் எந்தவொரு உறுப்புரையுடனும் முரண்படவில்லை என்றும் பாரளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

மேலும், அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட கட்டாய விதிகளை பின்பற்றி, நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை தொடர்புபடுத்த மனுதாரர் தவறியதால், இந்த சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு எண் SC/SD/29/2025இனை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தீவக கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டத்தில் சம்பியனானது அம்பிகை நகர் மகேஸ்வரி அணி

**நாரந்தனை அண்ணா சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நாரந்தனை அண்ணா சனசமூக நிலையமும் நாரந்தனை விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய தீவக கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.**

தீவகத்தின் 20 கழகங்கள் பங்குபற்றிய இந்த சுற்றுத் தொடர் கடந்த வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நாரந்தனை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக் கழகமும் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டியின் முதற்பாதியாட்டத்தில் முதல் கோலினை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக அணி பதிவு செய்தது. அதற்கடுத்த சில நிமிடங்களில் பதில் கோலை அடித்து அம்பிகைநகர் மகேஸ்வரி அணி சமனிலைப் படுத்தியது. இதனால் விறு விறுப்பாக முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் மேலதிக கோல்களைப் பெற முயற்சித்த போதும் இறுதி நிமிடங்களில் அம்பிகைநகர் மகேஸ்வரி அணி மேலும் ஒரு கோலினை பதிவு செய்து 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (3)



## யாழ்.வீராங்கனைகள் மூவர் தேசிய தடகளத்தில் சாதனை



93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட சேர் ஜோன் காபெற் தடகளபோட்டிகள் நேற்று முன்தினம் திங்கட் கிழமை கொழும்பு தியகம சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

முதல் நாள் நிகழ்வில் 20 வயதுப் பெண்கள் கோலூன்றிப்பாய்தலில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியை சேர்ந்த வீராங்கனை ப.அபிசாளினி 3.10 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் சுளிபுரம்விக்ரோறியா கல்லூரி வீராங்கனை யோ.நிருசா 3.00 மீற்றர் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும் வட்டுக்கோட்டை யாழ்.கல்லூரி வீராங்கனை ம.டர்சனா 2.90 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (3)




**வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் லயன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.**

**இதில் துடுப்பாட்ட போட்டியில் 2006 ஆம் வருட க.பொ.த சாதாரணதர அணியினரும் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் 2005 ஆம் வருட க.பொ.த சாதாரணதர அணியினரும் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியிருந்தனர்.**

(பட்டுவன்தன்)

## தேசியமட்ட தடகளத்தில் ஸ்கந்தவரோதயவிற்கு தங்கம்




கொழும்பு தியமக மகிந்தராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட சேர் ஜோன் காபெற் தடகளப் போட்டிகளின் முதல் நாள் நிகழ்வில் யா/ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவிகள் இருவர் சாதனை படைத்துள்ளனர்.

16 வயது பெண்கள் பிரிவினருக்கான கோலூன்றிப் பாய்தலில் ப.வைஸ்ணவி 2.40 மீற்றர் உயரம் வரை பாய்ந்து முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தினைத் தனதாக்கிக் கொண்டதோடு அதே கல்லூரியைச் சேர்ந்த சி.விதுர்சனா 2.30 மீற்றர் உயரம் வரை பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (3-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடப்புத்தகம் அச்சிடல் அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

366 பாடப் புத்தகங்களுக்கான 27.12 மில்லியன் பிரதிகள் அச்சிடப்பட வேண்டியுள்ள நிலையில், தேசியப் போட்டி விலை மனு முறைமையைக் கடைப்பிடித்து விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 29 நிறுவனங்கள் விலை மனுக்களைச் சமர்ப்பித்துள்ளன.

உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய, 3,491.47 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த 29 நிறுவனங்கள் மூலம் 366 பாடப் புத்தகங்களின், 25.49 மில்லியன் பிரதிகளை அச்சிடுவதற்குப் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (க-8)

# நீண்டதூர பேருந்துகளை பரிசோதிக்கத் திட்டம்

(கொழும்பு)

நீண்ட தூரம் பயணிக்கும் பேருந்துகளை தினந்தோறும் பரிசோதனைக் குட்படுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, 100 கிலோ மீற்றருக்கு அதிகமான தூர பிரதேசங்களுக்கு பயணிக்கும் பஸ்கள் தினந்தோறும் பரிசோதனைக்குட்படுத்த திட்டமிட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தலைவர் பொறியாளர் பி.ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

நீண்ட தூரம் பயணிக்கும் பஸ்களால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (க-8)

# சர்ச்சைக்குரிய கொள்கலன் விடுவிப்பு உண்மையை மூடிமறைக்கிறது அரசு



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு பிரிவு இலங்கைக்கு அறிக்கை சமர்ப்பித்ததா இல்லையா என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் விவகாரம் நாட்டின் தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது.

கெஹல்பத்தர பத்மே என்ற நபர் அண்மையில் கைது செய்யப்பட்டார். பொலிஸ்மா அதிபர் உட்பட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் இந்த கைதியை வரவேற்பதற்கு விமான நிலையத்துக்கு சென்றிருந்தார்கள்.

பாதாள குழு உறுப்பினர் கெஹல் பத்தரே பத்ம உள்ளிட்ட தரப்பினரை கைது செய்வதற்குரிய சிவப்பு பிடியாணையை இந்த அரசாங்கம் பிறப்பித்ததா அல்லது கடந்த அரசாங்கமா என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த நபர்களை கைது செய்வதற்குரிய சர்வதேச மட்டத்திலான சகல பணிகளையும் கடந்த அரசாங்கமே மேற்கொண்டது.

சுங்கத்தில் இருந்து 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. பிரபாகரனின் ஆயுதங்கள் இந்த கொள்கலன்களில் அடங்கியிருந்ததாக பாராளுமன்றத்தில் பேசப்பட்டது.

இந்த கொள்கலன்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு பிரிவு இலங்கைக்கு அறிக்கை சமர்ப்பித்ததா இல்லையா என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். இந்த கொள்கலன் விவகாரத்தில் அரசாங்கம் உண்மையை மூடி மறைக்கிறது என்றார். (க-8)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்தினால் 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தமது ஆளுகைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மறுமலர்ச்சிக்காக வாசிப்போம் எனும் தொனிப்பொருளில் தரம் 1தொடக்கம் 13வரையிலான மாணவர்களுக்கான நிறம் தீட்டல், கதை சொல்லல், சொல் தேடல், படம் பார்த்து கதை கூறல், விரைவு கணிதம், கட்டுரை, கதை விமர்சனம், சுவரொட்டி, சிறுகதை விமர்சனம், சிறுகதை ஆக்கம் மற்றும் கவிதை ஆக்கம் உள்ளிட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டியாளர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னராக தமது விண்ணப்பங்களை பொது நூலகம் மீசாலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-8-30)

# போதைப்பொருள் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதா? சஜித் கேள்வி

(கொழும்பு)

வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவுகளின் முன்னறிவிப்புகளை மீறி போதைப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் கொண்ட இரண்டு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டனவா என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்பில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கொள்கலன்கள் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனவா, யார் அவற்றை நடத்தியது, இந்த ஆண்டு தொடக்கத்தில் வெளியிடப்பட்ட 323 சிவப்பு லேபள் கொண்ட கொள்கலன்களில் போதைப்பொருட்களுக்கான மூலப் பொருட்கள் உள்ளனவா என்றும் அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மித்தெனிய மற்றும் கந்தானவில் "ஐஸ்" என்ற போதைப் பொருள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரசாயன கலவைகள் சமீபத்தில் பொலிஸார் மீட்டதை வரவேற்ற சஜித் பிரேமதாச இது ஒரு நேர்மறையான நடவடிக்கை என்றும் குறிப்பிட்டுள்ளார். (க-8)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -10, அராலி வீதி, 50/13 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனத்தின் பகுதி ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-15, எட்டாம் குறுக்குத் தெரு, புதிய சோனகத் தெரு, யாழ்ப்பாணத்தையும் தற்போது இல-40, இரண்டாம் குறுக்குத் தெரு, தில்லையடி, புத்தளத்தையும் சேர்ந்த மீரான் மொகிடீன் கலீலுல்லா என்பவர் 2004.08.23 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் 762 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனம் இல-38, கலீபா அப்துல் ஹமீது வீதி, யாழ்ப்பாணத்தையும் தற்போது இல-122 சென் லாஸரஸ் வீதி நீர்கொழும்பில் வசிப்பவருமான அப்துல் ஹரீம் முகம்மது நிஜாம்முகிதீன் என்பவரிடம் 1988இல் நொத்தாரிசு M.M.மன்சூர் முகதாவில் நெற்பரப்பு பத்து குளி பதினொன்று தசம் ஐந்து மூன்று(நெ.பர.10 குளி.11.53) விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை கொள்வனவு செய்ததாகவும் சாதனம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டதாகவும் அக்காலப்பகுதியில் முஸ்லீம் சமூகத்தினர் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையில் பதிவு செய்ய முடியவில்லை என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் அது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டு குறித்த ஆதனத்திற்கு தானே சொந்தக்காரர் எனவும் தனது ஆட்சிக்குட்பட்டது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தில் நெ.பர 01 குளி 8.44 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்தை மீரான் மொகிடீன் கலீலுல்லா 2011.01.06 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு முகம்மது சுல்தான் பலீல் முகதாவில் 82 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இல-146, 10 ஆம் குறுக்குத் தெரு, தில்லையடி, புத்தளத்தைச் சேர்ந்த கச்சு மொஹமட் அசனா லெப்பை நஸ்ரக்கிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை, கச்சு மொஹமட் அசனா லெப்பை நஸ்ரக் 2021.06.27 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ச.க.கணேசவேல் முகதாவில் 1976ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-519, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சதாசிவம் விஜயரூபனும் பெண் யசிந்தாவுக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு. ஜே/88, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பாம்பாட்டி மயிலன் புங்கடி" நெ.பர.10 குளி 11.53 இது உரிம நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 2004.08.23ஆம் திகதிய 541ஆம் இலக்கப் படத்தில் 1-7 துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் 3ஆம் துண்டு ஆதனம் இதன் விசாலம் நெற்.பர 01 ஒன்று குளி 8.44 எட்டு தசம் நான்கு நான்கு இந்த 3ஆம் துண்டின் எல்லைகள் முன்னுறுதிப்படி

கிழக்கு :- அப்துல் வஹாப்பின் ஆதனம்.
வடக்கு :- சுல்தான் முஹிதீன் ஜசீன் ஆதனம்.
மேற்கு :- குறித்த 541ஆம் இலக்கப் படத்தில் 2ஆம் துண்டு.
தெற்கு :- 4ம் துண்டு 10 அடி அகலப் பாதை நிலம், மேலும் குறித்த பத்து அடி அகலப் பாதை ஊடாக பயணிக்கும் உரித்தும். உட்பட இதனடங்கலும்.

தற்போது சதாசிவம் விஜயரூபனும் பெண் யசிந்தாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது சதாசிவம் விஜயரூபனும் பெண் யசிந்தாவும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர முதல்வர், யாழ் மாநகரசபை சபை.** (C-3836)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தை பிரதேச மருத்துவமனையாக தரமுயர்த்துங்கள்

## தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்

(சாவகச்சேரி)

**கைதடியில் அமைந்துள்ள ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டும் என தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளனர்.**

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும்-கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகர் ஊடாக மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் தமது கோரிக்கையில் கைதடி மத்திய மருந்தகம் 1952 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து ஏ-9 வீதியில் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி ஆகிய நகரங்களில் இருந்து அண்ணளவாக 10 கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு மையப்பகுதியில் கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

இந்தப் பராமரிப்பு நிலையத்தின் சேவை கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள வயோதிபர்கள், நவீல்ட் விழிப்புலனற்றோர் பாடசாலையில் உள்ள விசேட தேவையுடையவர்கள், பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகளின் காப்பகமான அரச சிறுவர்கள் பராமரிக்கும் இல்லத்தின் குழந்தைகள் என பரந்துள்ளது.

மேலும் விழிப்புலனற்றோருக்கான தொழிற்பூங்கா, யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவபீட விடுதி எனப் பலர் இப்பிரதேச மருத்துவமனையை நம்பி வாழ்கின்றனர்.

கைதடி முதியோர் இல்லத்துக்கு நிரந்தரமான மருத்துவர் மற்றும் பயிற்றப்பட்ட தாதி இல்லாமையால் அங்குள்ளவர்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்குவதுடன் இம்மருத்துவமனையில் நாளாந்தம் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது.

எனவே கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தை உடனடியாகக் கைதடி பிரதேச மருத்துவமனையாக தரமுயர்த்த உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும் என்று மக்களின் சார்பாக தென்ம ராட்சி அபிவிருத்திக் கழகம் கேட்டுக்கொள்கின்றது என மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தின் பிரதிகளை வடக்கு ஆளுநர், மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர். (8-30)




# கார்-மோட்டார்சைக்கிள் விபத்து உரும்பிராயில் சம்பவம்

(அராலி)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலாலி வீதி, உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை விபத்து சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளும், காரும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பன பகுதியளவில் சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(3-104)

# அராலியில் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் திருட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கு வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் உள்ள சி.சி.ரி.வி கமரா ஒன்று நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மது போதையில் வந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்தில் இருந்த சி.சி.ரி.வி கமராவை முறித்து சேதப்படுத்தியதுடன் அருகில் இருந்த அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் இருந்த சி.சி.ரி.வி கமராவை திருடிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் காலை தமது வர்த்தக ஸ்தாபனத்துக்கு வந்த உரிமையாளர்கள், தமது வர்த்தக ஸ்தாபனத்தில் இருந்து சி.சி.டி.வி கேமரா சேதப்படுத்தப்பட்டு இருந்ததையும், களவாடப்பட்டு இருந்ததையும் அவதானித்தனர்.

இதனால் இவ்விடயம் குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-104)

# செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணியளவில் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து திருமுறை நற்சிந்தனைப் பாடல் ஓதப்படும். இதையடுத்து 'நாவலர் பெருமான்' எனும் தலைப்பில் ஆசிரியர் சொல் வேந்தன் செ.சிறி ஆதவனின் உரையும் இடம்பெறவுள்ளது. (3)

# புலமைப்பரிசில் பரீட்சை கைதடி சேதுகாவலர் வித்தி சாதனை

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 6 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் 3 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் ஏனைய 3 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இது பாடசாலை வரலாற்றில் 100 வீத சித்தி என வித்தியாலய அதிபர் எஸ். சிறீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். (க-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 200-300 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 120 | 200 |
| தக்காளி | 100 | 120 | 150 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 230 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 220 | 350 |
| கரட் | 300 | 350 | 300 | 260 | 350 |
| பூசணி | 60 | 100 | 50 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 150 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-350 | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 190 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 600 | 400 | 350 | 320 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 250 | 250 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 180 | 200 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 100 | 150 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 280 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 350 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 60-140 | 150 | 80 | 80 |
| தேசிக்காய் | 800 | 500 | 600 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-200 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 400 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 100 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 240 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்குத் திசை மாறிய தன்னை திருடனாக்கி விட்டனர் ஊர்மக்கள்

## மனமுடைந்த இளைஞன் உயிர்மாய்ப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெலிமடை செல்லும் பேருந்தில் பயணித்த இளைஞன் தவறான இடத்தில் இறங்கியதால் கிராம மக்கள் திருடன் என்று நினைத்து அடித்து அதை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதனால் மனமுடைந்த நபர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

ரொச்சில்ட் தோட்டத்தில் வசிக்கும் 34 வயதுடைய ராமச்சந்திரன் புவனேஸ்வரன் முரளி என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

விடுமுறை கிடைத்தவுடன் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திக்க வீட்டிற்கு வருவதைக் குறித்த இளைஞன் வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து வந்த அவர் பேருந்தில் தூங்கிய நிலையில் இறங்க வேண்டிய இடத்தில் இருந்து வெகுதூரம் சென்றிருந்தார்.

நுவரெலியா செல்லும் வழியில் ரம்பொடையில் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார். அதிகாலை 2 மணி என்பதால் வீட்டிற்கு செல்ல பேருந்து இல்லாமையினால் அந்தப் பகுதியிலுள்ள தனது தாயின் சகோதரியின் வீட்டிற்கு செல்ல முயற்சித்துள்ளார்.

இரவில் வழியை மறந்து விட்டு வேறு வீட்டின் கதவைத் தட்டினார். எனினும் திருடன் என நினைத்த குடியிருப்பாளர்கள் கூச்சலிட்ட போது அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் வந்து அந்த இளைஞனை தாக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இளைஞன் இது குறித்து தனது உறவினர்களுக்கு தெரியப்படுத்திய நிலையில் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்துள்ளனர். அவர்களும் குறித்த இளைஞனை தெரியாது என தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக அங்கிருந்த மக்கள் இளைஞன் மீது தீவிர தாக்குதல் மேற்கொண்ட நிலையில் கொத்மலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கொத்மலை பொலிஸாரிடம் அவர் தனது அடையாளத்தை வெளிப்படுத்தியதை அடுத்து அவரை பொலிஸார் விடுவித்திருந்தனர்.

இந்நிலையில் மன வேதனை அடைந்த குறித்த இளைஞன் தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (க-8)

# 2026 ஒதுக்கீடு சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி

(கொழும்பு)

2026 நிதியாண்டுக்கான வரைவு ஒதுக்கீட்டு சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கு கடந்த ஜுலை முதலாம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூல வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிலையில் குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (க-8)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

### யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

ஜெ.சைந்தவி-182, வி.விபிஷா-166, றே.லபோனா-164, மு.நிவேதிகா-162, கி.வைகரி-162, த.கிருத்திகா-158, கா.புவியா-153, அ.திஷாரா-152, ஹ.இவான்ஜலின்-152, க.தேனுஜா-149, சு.சௌதாமினி-149, ச.ஹரிஸ்ணவி-149, ஜ.வர்ஷாலி-148, நி.பிரணவி-147, இ.மதுர்னா-147, ச.சாருக்ஷி-145, ய.தியாறா-145, ஸ்ரீ.சுதர்னி-145, தி.ஷாத்விகா-144, மோ.அட்சயா-144, ச.தன்ஷிக்கா-144, சி.அர்விதா-144, கி.கவீசனா-143, த.தனுஸ்கா-143, க.கம்ஷிகா-143, அ.அர்த்தனா-143, ர.ரேஸ்மி-142, சு.தேவிகா-141, சு.ஷர்மிதா-141, சு.விதுஷனா-141, அ.சானிதா-139, சு.பிருதிகா-139, வி.வித்யசஹி-139, ஸ்ரீ.டுசியா-138, அ.அபினிசா-138, ஸ்ரீ.அபிஷ்கா-137, த.நர்மிஷா-137, சி.பவிஷா-136, செ.வர்சிகா-135, கி.தக்சனா-134, தீ.அனுஸ்கா-133, க.தேனுசா-132, அ.அட்சயா-132

### யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை

சி.மதுவந்தி-141, ஜெ.ஜெயிஷனா-137, அ.ரினுஸ்கா-134

### யா/மகாஜனக் கல்லூரி–தெல்லிப்பழை

நி.பிரகீத்-172, இ.ஆரணன்-169, ப.சஸ்மிகா-168, ஜெ.நிரோஜன்-160, ந.கர்ஷனா-157, வி.அகரன்-155, ஜெ.புரந்தரன்-153, ந.அஷ்விகா-153, சு.துபிசனந்-150, தி.கஜசங்கவி-148, சி.அபிஷனா-147, ற.ஷாத்மிகா-145, டி.கர்ஷன்-144, சி.டரணியா-143, ப.பொன்னுமையாள்-143, க.டர்மிகன்-142, கோ.துஷானி-142, பி.ஜீவிகா-141, யூ-யகிர்னிகா லெம்பேட்-140, து.தியஷ்வினி-139, அ.ரிஸ்மிதா-138, ச.கேசவி-138, ஜெ.திகழ்ஜா-137, ச.டிரானியா-137, ச.மதுமிலன்-136, செ.பவிசாந்-136, மு.சஜிமீர் முகம்மத்-135, ஜெ.அஸ்வின்-135, வி.அபிராமன்-134, சு.தர்ஷித்-133, தீ.அனாமிகா-133, அ.டினுஸ்கா-132, இ.கோவர்த்தன்-132

# கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளன பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கரணவாய்)

2025 ஆம் ஆண்டிற்கான கரணவாய் கிழக்கு கமக்கார அமைப்பின் கால போக நெற்பயிர்ச்செய்கை கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை வியாழக்கிழமை வேதாரணியம் முன்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள மீள்எழுச்சி மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கரவெட்டி பெரும்போக உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வயல் பதிவுகளை கமக்கார அமைப்பே உறுதிப்படுத்த இருப்பதால் குறித்த கிராம விவசாய அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (3)

# இராசிபலன்

10.09.2025
ஆவணி 25, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 6.45 மணிவரை

ரேவதி முன்னிரவு 7.47 மணிவரை
சுப நேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை

சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**
திடீர் பயணங்கள் ஏற்படலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், உடல் நலனில் கவனம் தேவை, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்**
தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மனநிறைவு கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு.

**கடகம்**
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் கைகூடும், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்**
தொழில் ரீதியான சில குழப்பங்கள் தோன்றி மறையும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பயணங்களின் போது அவதானம் தேவை.

**கன்னி**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**துலாம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**
பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், காலைப் பொழுது கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**
கூட்டு முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உள்ளம் மகிழும் சம்பவமொன்று இல்லத்தில் நடைபெறலாம், உற்சாகமான நாள்.

**கும்பம்**
பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

உன்னுடைய பிரச்சினைக்கு நீயே தீர்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## "சர்பிங்" செய்த செல்லப்பிராணிகள் கைதட்டி மகிழ்ந்த உரிமையாளர்கள்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நாய்களுக்கென நடத்தப்பட்ட அலைச்சறுக்கு (சர்பிங்) போட்டி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.


விலங்குகள் தங்கும் இடத்திற்கான நிதியை திரட்டும் வகையில் வருடாங்களுக்கான நாய் அலைச்சறுக்கு போட்டி கலிபோர்னியாவில் உள்ள கடற்கரையில் நடைபெற்றது.

பல்வேறு இனங்கள் மற்றும் உயரத்தின் அடிப்படையில் நாய்கள் வகைப்படுத்தப்பட்டு போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டன.

பிரத்தியேக சர்பிங் பலகையில் ஒன்று மற்றும் அதற்கு மேற்பட்ட நாய்கள் அமர்ந்தபடி கடல் அலையில் மிதந்து இலக்கை எட்டி மீண்டும் கடற்கரைக்கு திரும்பின, இதனை பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கண்டுகழித்தனர். (க-8)



## நம்பிக்கையில்லாப் பிரேரணை; பிரான்சில் ஆட்சிக் கவிழ்ப்பு



(பாரிஸ்)

பிரான்ஸ், தேசிய சட்டமன்றத்தில் நடத்தப்பட்ட பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததால் பிரான்ஸ் பிரதமர் பிரான்சுவா பேரூ பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக 364 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிராக 194 பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இந்தநிலையில், பிரதமர் பிரான்சுவா பேரூ தலைமையிலான சிறுபான்மை அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாதங்கள் மட்டுமே பதவியில் இருந்த பிரான்சுவா பேரூ, இரண்டு பொது விடுமுறை நாட்களை ரத்து செய்தல் மற்றும் அரச செலவினங்களை முடக்குதல் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய 44 பில்லியன் யூரோ சேமிப்புத் திட்டங்களுக்கு பெரும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## இரக்கம் காட்டாத இயற்கை
### வெள்ளத்தில் தத்தளிக்கும் பஞ்சாப்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் உள்ள ஜலால்பூர் பிர்வாலா நகரில் ஓடும் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் நிலையில் குறித்த பகுதியில் ஏராளமானவர்கள் இன்னும் வெள்ளத்தில் சிக்கியுள்ளதாகவும் மீட்புப் பணியை துரிதப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிய வருகிறது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த ஆகஸ்ட் 26 ஆம் திகதி முதல் பெய்துவரும் கனமழை காரணமாக இதுவரை 41 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 56 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)



## குடும்பக் கப்பலுக்கு குண்டு போட்ட இஸ்ரேல்

(காசா)

காசாவிற்கு உதவிப் பொருட்களை அனுப்பும் குளோபல் சுமுத் புளோட்டிலா என்ற கப்பல், துனிசியா கடற்கரையில் கடந்த செவ்வாய்க்கிழமை ட்ரோன் மூலம் தாக்கப்பட்டுள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேலிய முற்றுகையை முறியடிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, காலநிலை தொடர்பான சமூக செயற்பாட்டாளர் கிரேட்டா தன்பெர்க் உட்பட 44 நாடுகளைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களை இந்த கப்பல் ஏற்றிச் சென்றுள்ளது.



ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பானீஸ் அவர்களும் இந்த கப்பலில் சென்றுள்ளார்.

போர்த்துகீசியக் கொடி ஏந்திய "குடும்பக் கப்பல்" எனப் பெயரிடப்பட்ட கப்பலில் அனைத்துப் பயணிகளும் பணியாளர்களும் பாதுகாப்பாக உள்ளனர்.

தற்போது விசாரணை நடந்து வருகிறது. மேலும் தகவல்கள் கிடைத்தவுடன் அது உடனடியாக வெளியிடப்படும்" என குளோபல் சுமுத் ப்ளோட்டிலா வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (க-8)

## தொடருந்துடன் மோதியது பேருந்து

மெக்சிகோவில் இரட்டை அடுக்கு பேருந்து மீது சரக்கு தொடருந்து மோதியதில் சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிகோ நகரத்தின் வடமேற்கு பகுதியில் நடந்த குறித்த விபத்தில் 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் குறித்த தகவல்கள் வெளியாகாத நிலையில் மீட்புப் படையினரால் விபத்துக்குள்ளானவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஊழல்வாதிகளே வீட்டுக்குப் போங்கள்!

# நேபாள அரசுக்கு எதிராக உச்சம் பெறும் மக்கள் போராட்டம்





**(காத்மாண்டு).......... நேபாளத்தில் சமூக வலைத் தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை அரசாங்கம் நீக்கியதைத் தொடர்ந்து போராட்ட வடிவத்தை மாற்றிய பொதுமக்கள் பிரதமரை பதவி விலகக்கோரி தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.**

நேபாள நாட்டு அரசாங்கம் யூடியூப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகத் தளங்களுக்குத் தடைவிதித்ததைத் தொடர்ந்து, தலைநகர் காத்மாண்டு உள்ளிட்ட பல நகரங்களில் பாரிய இளைஞர் போராட்டங்கள் வெடித்தன.

இந்த வன்முறை மோதல்களில் குறைந்தது 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 350இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக நேபாளப் பொலிஸார் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டம், நேபாளத்தில் "Gen-Z போராட்டம்" என்று அழைக்கப்படுகிறது. அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணாங்காததால், 26 சமூக ஊடகத் தளங்களுக்கு அரசாங்கம் தடைவிதித்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை ஆயிரக்கணக்கான இளைஞர்கள், பாடசாலை மற்றும் கல்லூரி சீருடைகளுடன் "ஊழலை நிறுத்துங்கள், சமூக ஊடகங்களை அல்ல" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பாராளுமன்றத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். போராட்டக்காரர்கள் தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் நுழைய முயன்ற போது, பொலிஸார் அவர்களைத் தடுக்க கண்ணீர்ப் புகை, நீர்த் தாரை பிரயோகம் மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

வன்முறையைக் கட்டுக்குள் கொண்டுவர, காத்மாண்டுவில் 10 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறினர்.

குறித்த போராட்டத்தையடுத்து சமூக வலைத்தள செயலிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக நேபாள அரசு அறிவித்தது.

இதைத் தொடர்ந்து போராட்டகாரரர் தமது போராட்ட வடிவத்தை மாற்றிக் கொண்டனர். அதன்படி நேபாளப் பிரதமர் கே.பி. சர்மா ஒலியை பதவி விலகக் கோரி பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**கட்டடங்களுக்குத் தீ வைப்பு**

ஆர்ப்பாட்டக்காரர்கள் நோபாள பிரதமரின் இல்லம், முன்னாள் மற்றும் இந்நாள் அமைச்சர்களின் வீடுகள், கட்சி அலுவலகங்கள், பாராளுமன்ற கட்டடம் உள்ளிட்ட பல கட்டடங்களுக்குத் தீ வைத்துள்ளனர்.

**பிரதமர் நாட்டை விட்டு வெளியேறத் திட்டம்?**

நிலைமை மோசமடைந்து வரும் நிலையில், நேபாளப் பிரதமர் கே.பி. சர்மா சீனா அல்லது தாய்லாந்துக்குச் செல்லத் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்தி, நேபாளத்தில் நிலவும் பதற்றமான சூழலை மேலும் அதிகரித்துள்ளது.

நேபாளத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும், மக்கள் அதை மீறி தலைநகர் காத்மாண்டுவில் பாராளுமன்றம் மற்றும் பிற இடங்களில் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.(க-8)

## பிரதமர் பதவி விலகாவிடின் போராட்டம் தொடரும்

(காத்மாண்டு)

நேபாளப் பிரதமர் கே.பி. சர்மா ஒலி பதவி விலகும் வரை தாங்கள் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் கூறி வருகின்றனர்.

ஜெனரல்-இசட் நடத்திய சமூக ஊடக ஆதரவு போராட்டம் தற்போது ஊழல் எதிர்ப்புப் போராட்டமாக மாறியுள்ளது.

பிரதமர் கே.பி. சர்மா ஒலி சமூக ஊடகங்கள் மீதான தடையை திரும்பப் பெற்றுள்ள நிலையில், பரவலான ஊழல் காரணமாக போராட்டக்காரர்கள் அவரைப் பதவி விலக வேண்டும் எனக்கோரி வருகின்றனர்.

குறிப்பாக, நேபாள அமைச்சர்களின் மகன்கள் மற்றும் மகள்களின் வீடியோக்கள் மற்றும் புகைப் படங்கள் நேபாளத்தில் சமூக ஊடகங்களில் வைரலாகி வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

அங்கு அமைச்சர்களின் குடும்பங்கள் ஆடம்பர வாழ்க்கையை அனுபவிக்கும் அதேவேளையில், சாதாரண நேபாளக் குடிமக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தக்கூட போராடுகிறார்கள் என இளைஞர்கள் கூறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரைச் சந்தித்தார் ஆசிய ஒலிம்பிக் சபை பணிப்பாளர்



(கொழும்பு)

உலக நீர்விளையாட்டு மற்றும் ஆசிய ஒலிம்பிக் சபையின் பணிப்பாளர் நாயகம் கப்டன் ஹுசைன் அல் முசல்லம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு, நேற்று முன்தினம் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, விளையாட்டு வீரர்களின் மேம்பாடு மற்றும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு அரசாங்கத்திற்கும் விளையாட்டுத்துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை கப்டன் ஹுசைன் அல் முசல்லம் வலியுறுத்தினார்.

மேலும், தற்போதுள்ள விளையாட்டுச் சட்டம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதின் அவசியத்தையும், தேவையான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் தேவையையும் எடுத்துரைத்தார்.

இதன்போது, பாடசாலை மாணவர்களிடமும் சமூகத்திலும் விளையாட்டை ஊக்குவிப்பதன் மூலம் நன்னடத்தையும் ஆரோக்கியமும் வளரும் என்று கூறிய பிரதமர், அத்தோடு, விளையாட்டுத் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், விளையாட்டு வீரர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், குறிப்பாகப் பெண்களின் பங்கேற்பில் கவனம் செலுத்துதல் போன்றவற்றில் அரசாங்கம் முன்னுரிமை அளித்து முதலீடு செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் கல்வி அமைச்சகத்துடன் இணைந்து நீர்வழி விளையாட்டுத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். (க-8)


## கல்யாணமாலை
### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:2001- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 6"
தகைமை/தொழில்:A/L,Team Leader
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16002

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:மூலம்
7இல்செவ்
கி-பா-22
உயரம்:5'8"
தகைமை/தொழில்-BE, London
எதிர்பார்ப்பு:படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16006

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:ரேவதி
2இல் செவ்
கி-பா- 27
உயரம்:5'11"
தகைமை/தொழில்:Engineer(USA)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16008

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா-38 1/4
உயரம்:5'5"
11இல் சூரி செவ்
தகைமை/தொழில்: Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16010

பிறப்பு:1982 - இந்து
நட்சத்திரம் :திருவாதிரை
கி-பா- 23
10இல்சூரிசெவ்
உயரம்:6"2"
தகைமை/தொழில்: O/L, Norway
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16011

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'
தகைமை/தொழில்: Assistant Pharmacist
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16001

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: சுவாதி
11இல்சூரிசெவ்
கி.பா: 1 1/2
உயரம்:5'1"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: தகுந்த வரன்
தொ.இ: G/16003

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-பூசம்
கி.பா-26 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BBM
எதிர்பார்ப்பு:வெளிநாடு, தகுந்த வரன்
தொ.இ: G/16004

பிறப்பு -1998 -இந்து
நட்சத்திரம் - அத்தம்
11இல்சூரிசெவ்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: Engineer, IT Field, சைவபோசனம்
தொ.இ: G/16005

பிறப்பு-1996-RC
நட்சத்திரம்:அத்தம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BBA,Executive Manager
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16007

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 439

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# ஆயுளின் எதிரிகள்!

மனிதனுக்கு ஆயுள் நூறு வருடங்கள் என்று சொல்கிறார்கள். ஆனாலும் ரொம்பப் பேர் பூரண ஆயுளுடன் வாழ்வதாகத் தெரியவில்லையே!" இது ஒரு சந்தேகம்.

இதே சந்தேகம் திருதராஷ்டிரனுக்கும் வந்தது.

உடனே திருதராஷ்டிரன் விதுரரைப் பார்த்துக் கேட்கிறான்.

"ஏன் இப்படி யாருமே பூரண ஆயுளுடன் வாழ்வதில்லை? என்று!

இந்தக் கேள்விக்கு விதுரர் பதில் சொல்கிறார்.

"ஆறு கூரிய வாள்கள். மனிதனுடைய ஆயுளை அழிக்குது!" என்கிறார்.

அது என்ன ஆறு கூரிய வாள்கள்?

அவரே சொல்கிறார். அதிக கர்வம், அதிகம் பேசுவது, தியாக மனப்பான்மை இல்லாமை, கோபம், சுயநலம் நண்பர்களுக்கு துரோகம் இது தான் ஆயுளை வெட்டக் கூடிய கத்திகள்!

அதிக கர்வம் என்று சொன்னோம் பாருங்கள். அது ஒரு முக்கியமான வாள்.

தான் ரொம்பக் கெட்டிக்காரன் தன்னிடம் நிறைய பணம் இருக்கிறது. தன்னாலே தான் எதுவும் நடக்கிறது. இப்படியெல்லாம் நினைக்கிறது தவறு. நான் தான் நல்லவன் மற்றவன் எல்லாம் கெட்டவன் என்று நினைக்கும் போது கர்வம் அதிகரிக்கிறது. இது நம் அழிவுக்குக் காரணமாக ஆகிவிடும்.

அதனாலே தன் விடயத்திலே குற்றங்களையும் பிறர் விடயத்திலே குணங்களையும் பார்ப்பதற்குப் பழகிக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது விடயம்:

அதிகம் பேசுபவன். வீண் வம்பை விலைக்கு வாங்குவான்.

அது இடைஞ்சலில் கொண்டு வந்து விட்டு விடும். நம் பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்றால் அதிலே கடுமை இருக்கக்கூடாது!

உண்மையானதாக இருக்க வேண்டும்! பிரியமானதாக இருக்க வேண்டும். நன்மையைக் கருதியதாக இருக்க வேண்டும்!

அதுதான் நல்ல பேச்சு!

மூன்றாவது விடயம்:

எல்லாவற்றையும் நாம்தான் அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆசை காரணமாகதான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவதில்லை!

பிறருக்கு உதவுவதற்காகத்தான் நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம் என்று உணர்ந்தவர்கள் தியாக மனப்பான்மை உள்ளவர்கள்! அடுத்தது கோபம்! கோபம்தான் மனிதனுடைய முதல் எதிரி! கோபத்தை வென்றவன் தான் யோகி! அவன் தான் உலகில் சுகப்படுவான் என்பது பெரியவர்கள் வாக்கு! கோபத்திலே இருப்பவனுக்கு தர்மம் எது - அதர்மம் எது என்று தெரியாது! அந்த விவேகத்தை இழந்துவிடுவான். பாவம் செய்ய ஆரம்பித்துவிடுவான்.

அதனாலே கோபப்படாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் கோபப்பட்டால் நாம் அதை சகிப்பதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.

அடுத்தது சுயநலம்! சுயநலம் தான் எல்லாத் தீமைகளுக்கும் காரணம் தங்களுடைய காரியம் ஆக வேண்டும் என்பதற்காக எந்த பாவத்தையும் செய்ய துணிந்து விட்டால் அவர்கள்தான் சுயநலவாதிகள்!

அடுத்தவர்கள் சந்தோஷத்தைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வேண்டும். அடுத்தவர்கள் துன்பத்தைப் பார்த்து நாம் வருத்தப்பட வேண்டும். இப்படி செய்தால் சுயநலம் போய்விடும் என்பது பெரியவர்கள் வாக்கு!

ஆறாவது விடயம்:

நண்பர்களுக்கு துரோகம். இந்த உலகத்திலே நல்ல நண்பர்கள் கிடைப்பது அபூர்வம்.

அப்படி இருக்கும் போது அவர்களுக்குத் துரோகம் செய்ய நினைப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம். நமக்கு யாரிடமும் வெறுப்பு என்பதே இருக்கக்கூடாது. சிநேக மனப்பான்மை வேண்டும். கருணையோடு பழக வேண்டும். ஆயுளை அழிக்கும் ஆறு வாள்கள் என்று பெரியவர்கள் சொல்வது இந்த ஆறு விடயங்கள் தான்.

இந்த ஆறு விடயத்திலேயும் கொஞ்சம் கவனமாக இருந்தால் போதும். வெற்றிகரமான வாழ்க்கை நிச்சயம்!

இந்தக் காலத்து நண்பர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா?

ஒருவன் சொன்னான்

"இன்றைக்கு என் நண்பனை அழைத்துக்கொண்டு ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டேன். 100 ரூபாய் செலவானது. என்றான் ரொம்பப் பெருமையாக! "அப்படியா?" என்றேன் நான்! இதற்கு அவன்.

"ஆமாம்! அதுக்கு மேலேயும் செலவு செய்ய எனக்கு ஆசைதான். ஆனால் அது முடியாமல் போய்விட்டது! ஏன்னென்றால்... அவனிடம் இருந்ததே நூறு ருபாய்தான்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளந்த உழவர்களுள்ளும் உளவியல் தாக்கங்கள்




**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாமனைவரும் சுகதேகிகள் என்று நினைத்தாலும் சுகதேகிகள் என்னும் நினைப்போடு வாழ்ந்தாலும் ஏதோவொரு வகையில் உளவியல் தாக்கத்திற்குட்பட்டவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உடல் தேகாரோக்கியமாக இருந்தும் உளம், எமது மனம் காயப்பட்டு விட்டால் அல்லது சோர்வுக்குள்ளானால் நாமும் ஒருவகையில் நோயாளிகளே. எமது அன்றாட செயற்பாடுகள் நடவடிக்கைகள் இதனை இலகுவாகவே வெளிக்காட்டிவிடும். தேவையற்றதற்கு கோபப்படுவது, சோர்ந்திருப்பது, அற்ப காரணத்தை பெரிதாக்கி பின்பு நாமே நொந்து கொள்வது, எங்கேயாவது எப்படியாவது பிரச்சினையை உண்டுபண்ண எத்தனிப்பது, ஒரு காரியத்திலும் பிடிப்பில்லாமல் இருப்பது, வெறுமையென உணர்வது. தேவையற்று பொறாமைப் படுவது, இப்படி பலகாரணங்கள் இருந்தாலும் சமூக காரணிகளும் அவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன. விரும்பிய வாழ்க்கையை ஓய்வின்றி தேடியோடி இறுதியில் பாதிவரை வந்து களைத்து இப்படியே இருந்துவிட்டு போய்விடுவோமே என நினைக்கத் தோன்றுகின்றது. அதற்கு மேலும் முயற்சித்தாலும் நிம்மதியென்ற ஒன்றை அடையவே முடியாமல் இருக்கின்றது என பலரும் அங்கலாய்ப்பதுண்டு. இதில் முக்கிய காரணியாக திகழ்வது கையிருப்பாக இருக்கும் பணம் தான். அதனை மையப்படுத்தியே வாழ்க்கையும் வாழ்வாதாரமும் சுழன்று கொண்டிருக்கின்றது. குணத்தை மிஞ்சியதாக பணத்திற்கான முக்கியத்துவம் அதிகரித்துவிட்டது.

உளநெருக்கீடு என்பது உலகத்திலுள்ள பலருக்கும் தற்போது பிரச்சினையாகி பெருத்திருக்கின்றது. ஏதோவொரு வகையில் இந்த பாதிப்பிற்குள் நாம் விரும்பியோ விரும்பாமலோ வந்துவிட்டோம். சக்தி உள்ளவர் அதனை பெரிதாக பொருட்படுத்தாது தமது கடமைகளை செவ்வனே செய்தாலும் நாளடைவில் அவர்களுக்குள்ளும் ஏதோவொரு வகையில் உளநெருக்கீடு உள்ளார்ந்து கொள்கின்றது. பெரும்பாலும் அதிகநேரம் ஓய்வின்றி உழைப்பவர்கள், தம்மை வருத்தி பணிசெய்பவர்கள் தமது உடல்நலத்தை கவனியாதவர்கள் இவ்வாறான சிக்கலுக்குள் தம்மை யறியாது உள்நுழைந்து விடுவர்.

எங்களூர், உழவர் பெருமக்கள் அன்றும் இன்றும் பலவிதமான இன்னல்களுக்குள்ளாகி இருக்கின்றனர். குறிப்பாக தங்களிடம் இருக்கின்ற பணத்தை முதலீடு செய்து உழவு செய்து விதைவிதைத்து பயிராக்கி அதனை அறுவடையாக்கி விற்பனை செய்து செலவழித்த பணத்தையும் அதனுடன் ஆதாயத்தையும் மீட்டெடுக்க படும் பாடு இருக்கின்றதே. அத்துணை வலிகளையும் தாங்கி தினந்தினம் வயலில் வேலைசெய்து பெறுகின்ற பயிரை அறுவடையும் செய்து அதனை காயவைத்து விற்பனை செய்து பெறும் பணம் வரை பலவித இன்னல்களை கடந்து செல்ல வேண்டியே இருக்கின்றது. பலரும் நினைப்பது போல உழவுத்தொழில் இலகுவான தொழிலல்ல. தற்போதுள்ள தொழில்நுட்ப உலகத்தினுள் தம்மை ஈர்த்திருக்காத உழவுத்தொழில் முன்னேறுவது சாத்தியமற்றது. ஆனால் அதற்காக முதலிடும் நிதியும் அடிப்படையில் தேவையான ஆகக்குறைந்த அறிவும் மிக மிக அவசியமானதாகும். தொழில்நுட்ப அறிவினை உழவர் பெருமக்கள் மெதுவாகவேனும் கற்றுக் கொள்வது அவர்களது பயிர்ச்செய்கைக்கு பெரிதும் உதவும். பாரம்பரிய பயிர்ச்செய்கை உத்திகளைப் பயன்படுத்தினாலும் பயிர்ச்செய்கை விஸ்தீரணத்தை அதிகரிக்கும் போது வளர்ந்துவிட்ட தொழில்நுட்ப அறிவையும் சேர்த்து பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் எழலாம். வயற்பரப்பு சிறிதோ பெரிதோ தொழினுட்பத்தின் தேவை அதீதமாக உணரப்படுகின்றது. தற்போது பரவலாக பேசப்படும் துல்லிய வேளாண்மை (Precision farming) கணணி அறிவுடன் கூடிய பயிர்ச்செய்கையை குறிக்கின்றது.



உலகளாவிய ரீதியில் மக்கள் பலரும் முகங்கொடுத்த உளவியல் பிரச்சினைகளுக்கு உழவர் பெருமக்களும் விதிவிலக்கல்ல என அறியமுடிகின்றது. உளவியல் பிரச்சினைகளில் மனவழுத்தம் (Stress), பதற்றம் (Anxiety) மற்றும் மனச்சோர்வு (Depression) ஆகியனவும் இன்னும் தற்கொலை செய்வதற்கான உந்துதலாக மாறி மாறி ஏதோவொரு வழியில் உழவர்பெருமக்களையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. பிறநாடுகளில் குறிப்பாக அண்டை நாடுகளில் பயிர்ச்செய்கை சரிவர வராமல் ஆதாயம் கிடைக்காமல் எடுத்த கடனை மீள கட்ட முடியாமல் குடும்ப செலவினத்தை தாங்க முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதனை அறிய முடிகின்றது. ஆனால் எமது நாட்டில் கொவிட் 19 காலப்பகுதியில் இழந்த ஆதாயத்தை மீண்டும் மீட்டெடுத்துக் கொள்ள எடுத்த முயற்சிகள் கைகூடாமல் பெற்ற அறுவடையையும் நல்ல விலைக்கு விற்க முடியாமல் போனதையும் பலர் சொல்ல கேட்கமுடிகின்றது. கொவிட் 19 இல் சந்தைக் கட்டமைப்பே சீர்குலைந்ததையும் செல்பேசி பரிவர்த்தனை (mobile phone communication) மற்று சமூக வலைத்தளங்களான வட்ஸ் அப் (Whatsapp) மற்றும் முகப் புத்தகங்கள் (Facebook) அதிகமாக பயன்படுத்தப்பட்டதையும் அங்கிருந்து தற்போது வரைக்கும் இந்த டிஜிற்றல் அல்லது எண்மப் பொருளாதாரம் (Digital Economy) எமது நாட்டில் முனைப்புக் காட்ட தொடங்கி தற்போது அது வளர்ச்சி நிலையில் இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த டிஜிற்றல் பொருளாதாரம் எம்மவர் விவசாயச் செய்கையில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்றால் நிச்சயமாக மாற்றத்தை ஏற்படுத்துமாயினும் அது மெல்ல மெல்ல செல்லும் அணுகுமுறையாகவே இருக்கும். டிஜிற்றல் கல்விமுறை பல்கலைக்கழகங்களில் அவசியம் எனப் பரிந்துரைக்கப்பட்ட காலங்களிலிருந்து கணிசமான மாணவர் சார்ந்த விடயங்கள் டிஜிற்றல் மயப்பட்டாலும் அது முழுமைபெறவில்லை என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். எமது நாட்டில் உள்ளூர் போரின் போது ஏறக்குறைய 30 ஆண்டுகள் வடமாகாணம் பாரிய பாதிப்பை அழிவுகளை சந்தித்தது. அதன் பின்னர் கொவிட் 19 வந்ததுடன் தேசமே, உலகமே நின்று போனது. அந்த பின்னடைவிலிருந்து மீண்டு வர எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சரிவின் அந்த அழிவின் (Economic disaster) காரணமாக உள்ளீடுகளின் விலை பலமடங்கு உயர்ந்து அறுவடைசெய்யப்பட்டவற்றை விற்கவும் முடியாமல் அவற்றை களஞ்சியப்படுத்தவும் முடியாமல் உடலளவில் மட்டுமல்ல மனதளவிலும் சோர்வடைந்துள்ளனர். உழவர்கள் மட்டுமல்ல முழுக்குடும்பமும் தமது செலவினங்களை கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர். எங்காவது தங்களுக்கான விடிவு காலம் கிடைக்காதா என ஏங்கிய வண்ணம் இருக்கும் இவ்விவசாயிகளில் பலருக்கு உளநெருக்கீடு ஏற்படுகின்றது.

காலநிலை மாற்றம் அவ்வப்போது எமது உழவர் பெருமக்களை நலிந்தவர்களாக மாற்றிவிடுகின்றது. நன்றாக ஆரம்பித்த பயிர்வேளாண்மை இடையில் அதீத மழையாலோ அல்லது வரட்சியினாலோ பயிர் அழிவுகளுக்குள்ளாகி விடுகின்றது. இவற்றுடன் இணைந்து பயிரில் வரும் பூச்சிப் பீடைகள் மற்றும் நோய்கள் மேலும் பயிரிழப்புக்களை அதிகரித்துவிடுகின்றன. பணவீக்கம் அதிகரித்துவிட்டது. உழவர்பெருமக்கள் தனிமைப்படுத்தப்பட்டதான உணர்வு. தொடர்ச்சியாக பயிர்ச்செய்கையே நிச்சயமற்ற தன்மையில் இருக்கும் போது உழவர்பெருமக்களை உளநெருக்கீட்டிலிருந்து காப்பாற்றுவது அவசியம். அவர்களுக்கான பயிர் அழிவு நிவாரணம் மற்றும் அவர்களது குடும்ப வறுமை விடயங்களை கருத்தில் கொண்டு விவசாயப் பெருமக்களை காப்பாற்றும் பொறிமுறை இன்னும் முனைப்புப் பெற வேண்டும்.

உலகுக்கு உணவளிக்கும் உழவர்பெருமக்களை உளநெருக்கீடுகளிலிருந்து காப்பாற்றும் பொறிமுறை உருவாக்கப்பட்டு செயல்வடிவம் பெறவேண்டும். உழவுத்தொழிலை முழுமையாக அங்கீகரித்தால் அதிலீடுபடும் உழவுப் பெருமக்கள் படும் இன்னல்கள் சவால்கள் போன்றனவற்றை செவிமடுத்து அதற்கான பரிகாரம் கண்டறியப்படல் வேண்டும். பொதுவாகவே விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் போன்ற துறைகளிலும் விவசாய உள்ளீடு வழங்கும் அக்ரேரியன் திணைக் களத்திலும் உளநெருக்கீடு பற்றி ஆலோசனை வழங்குவதற்காக உளவளத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இணைக்கப் படல் வேண்டும். இந்த ஆளணியை முறையாக செம்மையாக பயன்படுத்தினால் உழவர்பெரு மக்களை எந்த உளஞ்சார்ந்த இடரிலிருந்தும் காப்பாற்றுவதோடு அவர்களை அரவணைத்து உற்பத்தியில் அவர்களை மேலும் ஈடுபட ஊக்குவிக்கலாம். மிக முக்கியமான விடயமாக இது கவனத்தில் கொள்ளல் அவசியமாகும். இன்றேல் நாமனைவரும் உண்ணுவதற்கான உணவு கேள்விக்குறியாகி விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 862





பூங்குழலி அங்கே நின்று கொண்டிருப்பதைப் பார்த்ததும், இளையபிராட்டி யின் திருமுகத்தில் குடி கொண்டிருந்த கவலைக் குறி மறைந்து, வியப்பும் உவகையும் ஒருங்கே பிரதிபலித்தன.

**24ஆம் அத்தியாயம்**

**இளவரசியின் அவசரம்**

இளவரசிகளை உபசரித்து வரவேற்றுப் பீடங்களில் உட்காரச் செய்த பிறகு அநிருத்தர் தாமும் அமர்ந்தார். "தேவி, என்னைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி அனுப்பினால் நானே வந்திருக்கமாட்டேனா? இவ்வளவு அவசரமாக வந்த காரணம் என்ன? சக்கரவர்த்தி சௌக்கியமாயிருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார். "சக்கரவர்த்தியின் தேக சுகம் எப்போதும் போலிருக்கிறது, ஐயா! ஆனால் மனதுதான் கொஞ்சமும் சரியாக இல்லை. நேற்று இரவு அடித்த கடும் புயல் தந்தையின் மனத்தை ரொம்பவும் பாதித்திருக்கிறது. இராத்திரியெல்லாம் அவர் தூங்கவில்லை. குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள் என்ன கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணி அடிக்கடி புலம்பினார்.

பொழுது விடிந்தவுடன் தங்களைப் போய்ப் பார்க்கும்படி சொன்னார். புயலினால் கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களுக்கெல்லாம் உடனே உதவி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாம். அதைத் தங்களிடம் சொல்லுவதற்காகவே முக்கியமாக வந்தேன்!" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

"தேவி! இந்த எளியவனால் என்ன செய்ய முடியும்? முதன் மந்திரி என்ற பெயர்தான் எனக்கு என்பது தங்களுக்குத் தெரியாதா? பெரிய பழுவேட்டரையர் இந்தச் சமயம் ஊரை விட்டுப் போயிருக்கிறார். பொக்கிஷத்தை இறுக்கிப் பூட்டிக் கொண்டுதான் போயிருப்பார். அவருடைய சம்மதமின்றிக் காலாந்தககண்டரால் கூடப் பொக்கிஷசாலையைத் திறக்க முடியாதே! கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? வாசலில் பலர் வந்து காத்திருப்பதைத் தாங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் அவர்களைப் பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதனால்தான் வெளியில் செல்லத் தயங்கிக் கொண்டிருக்கிறேன்" என்று அநிருத்தபிரம்மராயர் பஞ்சப் பாட்டுப் பாடினார்.

"ஐயா! அதைப்பற்றி தாங்கள் கவலைப்பட வேண்டாம் என்னுடைய சொந்த உடைமைகள் அனைத்தையும் கொடுக்கிறேன். என் அன்னையும் அவ்விதமே கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையில் உள்ள எல்லாப் பொருட்களையும் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம். தந்தை அவ்விதம் சொல்லி அனுப்பினார். ஏழைகளின் கஷ்டங்களுக்குத் தற்காலிக, சாந்தியாகவேனும் ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள்"

"தங்களுடைய சொந்த உடைமைகள் யானைப் பசிக்கு சோளப் பொரி கொடுத்ததாகவே இருக்கும். சோழ நாடு முழுவதும் நேற்றுப் புயல் அடித்திருக்கிறது. எங்கெங்கே என்னென்ன நேர்ந்திருக்கிறது என்ற செய்திகளே இன்னும் கிட்டவில்லை. இதோ நிற்கிறானே, என் பரமானந்த சீடன், இவன் பெரும் பயங்கரமான செய்தியைச் சொல்லுகிறான். கடல் பொங்கி எழுந்து கோடிக்கரை முதல் நாகைப்பட்டினம் வரையில் கடலோரமுள்ள ஊர்களையெல்லாம் மூழ்கடித்து விட்டதாம். (தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## கல்விதான் நமக்குச் செல்வம்



(நேற்றைய தொடர்ச்சி)

புலவரைப்பார்த்த மன்னன் நீங்கள் யார்? எதற்காக என்னைக் காண வந்தீர்கள்? என்று கேள்வி மேல் கேட்டான்.

ஐயா நான் ஒரு புலவன் தங்களை ஒரு விடயமாகக் காண வந்துள்ளேன், என்று சொல்லவும், மன்னர் இடி இடி என சிரித்து உம்மைப் போல மேதாவிகளுக்கு என்னிடம் என்ன வேலை? காலத்தை வீணடித்துக் கொண்டு இருக்கும் உம்மைப் போன்ற புலவர்களை உள்ளேயே விடக் கூடாது என வாயில் காப்போனிடம் அறிவுரை சொல்லியும் உம்மை உள்ளே அனுப்பி இருக்கிறான்.

முதலில் அவனை உள்ளே வரச்சொல்லி பத்து சவுக்கடி வழங்க உத்தரவிடுகிறேன் என்று ஆணையிட்டான்.

புலவர் பதறி மன்னா சற்றுப் பொறுங்கள், அவன் என்னைத் தடுத்தான். நான்தான் உங்களை அவசரமாகக் காண வேண்டும் என்று கட்டாயப்படுத்தி உள்ளே வந்துவிட்டேன். பக்கத்து நாட்டு மன்னனைக் காண நான் சென்றபோது இந்த ஓலையை உங்களிடம் தரச்சொல்லி அனுப்பி வைத்தார். வாங்கிப் பார்த்த மன்னனுக்கு அதில் என்ன எழுதி இருக்கிறது என்பது புரியவில்லை, அருகில் உள்ள மந்திரியிடம் கொடுத்து படிக்கச்சொல்ல அவரும் அதிகம் படிக்காதவராகையால் எனக்கும் புரியவில்லை மன்னா என்று தலையைச் சொறிந்தார்.

புலவரே அதில் என்ன எழுதி இருக்கிறது என்பதை நீரே சொல்லும் என்று புலவரைப் பார்த்துக் கேட்க மன்னா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் இதைக் கொடுத்த மன்னர் இதில் உள்ளதை நீர் கண்டிப்பாகப் படித்து சொல்லக் கூடாது.

அப்படிச்சொன்னால் அதன் பலன் மன்னனுக்கு கிடைக்காமல் போய்விடும். இதை மன்னன் தானாக புரிந்து கொண்டால் அவனுக்கும் செல்வங்கள் வந்து குவியும் என்று சொன்னார்.

இல்லை என்றால் அவருக்கு அழிவுதான் என்றும் சொல்லி விட்டார். என்னை மன்னியுங்கள் மன்னா, நான் வருகிறேன் எனது கடமை முடிந்தது என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டார்.

ஓலையை வாங்கிய மன்னனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை, அங்கிருந்த அனைவருக்குமே கல்வி அறிவு குறைவாக இருந்ததால் ஓலையில் என்ன எழுதி உள்ளது என்று படிக்க முடியவில்லை.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான நாளை வேண்டுமானால் நேற்றை விட இன்னும் அதிகம் உழையுங்கள்!

– ஜான்சிமேக்ஸ்வெல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளகப் பொறிமுறை என்பது எந்தவகையில் நியாயமாகும்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் எட்டாம் திகதி ஆரம்பமாகியது.

கூட்டத்தொடரின் முதல் நாளில் இலங்கை விவகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் தனது அறிக்கையில், இலங்கை விவகாரத்தை துலாம்பரப் படுத்தியிருந்தார்.

அதில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்பதை அவர் வலியுறுத்தியிருந் தார்.

இதற்குப் பதிலளித்த இலங்கை வெளிவிவ கார அமைச்சர் விஜித ஹேரத்; உள்ளகப் பொறிமுறை மூலமே போர்க்குற்ற விசாரணை இடம்பெறும்.

மாறாக, சர்வதேச விசாரணைக்கு இட மில்லை எனக் கூறியுள்ளார்.

இங்குதான் ஒரு விடயத்தை அநுர அரசாங் கம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக் கப்பட்ட போர்க்குற்றங்கள் என்பது இலங்கை அரசாங்கங்களாலும் அரச படைகளாலும் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

தவிர, இலங்கைத் தீவில் தமிழின அழிப்பு இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் உண்டு.

நிலைமை இதுவாக இருக்கையில், போர்க் குற்ற விசாரணைகளை உள்ளகப் பொறி முறை மூலம் அரசாங்கமே மேற்கொள்வ தென்பது எந்தளவுதூரம் நீதியாக அமையும் என்ற ஐய வினாவை ஏற்படுத்தக்கூடியது.

தவிர, இலங்கையில் தமிழின அழிப்பு இடம் பெறவில்லை என்பது கடந்தகால அரசாங் கங்களின் அறிக்கையாகும்.

ஆக, போர்க்குற்றத்தை இழைத்த தரப்பு அது தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வதென்பது எந்தவகையிலும் நியாய மாகாது.

மேலும் இலங்கையில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு அநுர அரசாங்கத்திடம் இருக்குமாயின், பாதிக் கப்பட்ட தமிழ் மக்கள் எத்தகைய விசா ரணையை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிய வேண்டும்.

அதுதான் நடுநிலையான ஓர் அரசாங்கத் தின் இலட்சணமாக இருக்கும்.

அந்தவகையில் தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் சர்வதேச விசாரணை மட்டுமே தமக்கான நீதியைப் பெற்றுத் தரும் என நம்பு கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட தரப்பின் நியாய பூர்வ மான கருத்தை ஏற்றுக் கொண்டு, சர்வதேச விசாரணைக்கு இடம்கொடுப்பதுதான் அரச தர்மமாகும்.

அதாவது உள்ளகப் பொறிமுறை விசாரணை யில் எட்டப்படும் முடிவுகள் பக்கசார்பானவை என்ற விமர்சனம் எப்போதும் இருந்து கொள் ளும். தவிர அது பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தவும் மாட்டாது.

ஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென அநுரவின் அரசு கருதுமாயின், அதற்கான ஒரே வழி சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்க முடியும்.

# கிளிநொச்சி மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிறீதரன் எம்.பி வலியுறுத்து

கிளிநொச்சி மாவட் டத்தில் மக்களுக்கு முறையாகக் காணி உறுதிப் பத்திரங்களை வழங்க அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண் டும். வடக்கு மாகாண த்தில் விவசாயத்துறை யில் ஏற்பட்டுள்ள பாதிப் புக்கு உடன் தீர்வு பெற் றுக்கொடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீ தரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை நடைபெற்ற அமர் வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கமத் தொழில், கால்நடை வள ங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்ச ரிடம் கேள்வி எழுப்பி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

நூறு வருடங்கள் கடந்துள்ள போதும் கிளி நொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு முறையாக காணி உறுதிப்பத்தி ரங்கள் வழங்கப்படவி ல்லை.

இந்த மாவட்டத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் 12 ஆயிரத்திற்கும் அதிக மான காணிகள் உள்ள நிலையில் அவர்களுக் கான காணி உறுதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கா மல் இருப்பது ஏன்? அதன்படி முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி க்கை விடுக்கின்றேன் என்றார்.

இதற்குப் பதிலளி த்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப் பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க கிளி நொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 1850 உறு திப்பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 477 விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டுள்ளன. அதன்படி அந்த விண் ணப்பங்கள் ஏற்றவாறு உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நட வடிக்கைகள் எடுக்கப் படும் என்றார். (ம-7)

## நூற்றாண்டு விழாக் காணும் பண்ணாகம் மெய்கண்டான்

(பண்ணாகம்)

யாழ்ப்பாணம் பண் ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவும் நூற்றாண்டு மலர் வெளியீட்டு நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 9.05 மணிக்கு வித்தியாலய வளாகத் தில் சிறப்புற இடம்பெற வுள்ளது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கம் பெரு மையுடன் நடாத்தும் இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக வித்தியாலய த்தின் பழைய மாணவ னும் பிரபல இருதய சத் திர சிகிச்சை நிபுணரு மான வைத்திய கலாநிதி ஞா.காந்திஜி அவர்கள் கலந்து சிறப்பிக்கவு ள்ளார். (ம-7)

## மாற்றுவலுவுடையோருக்கான விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண விளை யாட்டுத் துறையின் இணைமாற்று ஏற்பாட் டில் மாற்று வலுவுடை யோருக்கான வடக்கு மாகாண தடகள விளை யாட்டுப் போட்டிகள் 2025 இன்று காலை 8.30 மணியளவில் யாழ்ப் பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மகளீர் விவ கார அமைச்சின் செய லாளர் நந்தகோபாலன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வட க்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் செல்வி அகல்யா மற்றும் வடக்கு மாகாண விளையாட் டுத்துறைப் பணிப்பாளர் முகுந்தன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவு ள்ளனர். (ம-7)

## காலியில் முச்சக்கரவண்டியில் பயணமானவர் மீது துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

காலி மாவட்டம் அம் பலாங்கொடை, ஹினட் டிய வீதியில் முச்சக்கர வண்டியில் பயணித்த குழுவினர் மீது துப்பாக் கிச் சூடு நடத்தப்பட்டுள் ளது.

மோட்டார் சைக்கி ளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர் களால் இந்தத் துப்பாக் கிச் சூடு நடத்தப்பட்டு ள்ளது.

மேலும் துப்பாக்கிச் சூட்டில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இது குறித்த விசார ணைகளை அம்பலாங் கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகி ன்றனர். (ம-7)

## கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கி யின் யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டில் "அருணலு" தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் சாதனை படைத்த மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பரி சில் வழங்கல் நிகழ்வா னது இன்று மாலை 5.00 மணியளவில் யாழ். இந்து ஆரம்ப பாட சாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் அவர் களும் சிறப்பு விருந்தினர் களாக வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப் பாளர் அன்னலிங்கம் ரவீந்திரன் மற்றும் யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி மாலதி முகுந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (ம-7)

## ஒரு பில்லியன் டொலர் இலங்கைக்கு நேரடி முதலீடு

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் முதல் வருடத்தில் இல ங்கை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முத லீட்டை ஈர்த்துள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நா யக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்,

பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல துறைக ளைக் கருத்தில் கொண்டு பிற நாடுக ளுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

கடந்த ஒக்டோபர் முதல் இன்று வரை, இலங்கை 1.015 பில்லி யன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முத லீட்டைப் பெற்றுள்ளது. இவை கையெழுத்திடப் பட்ட அல்லது உறுதிய ளிக்கப்பட்ட ஒப்பந்தங் கள் அல்ல. ஆனால் நிறைவேற்றப்பட்ட நிதி கள் என்றார். (ம-7)

## கட்டாரில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

(டோஹா)

கட்டார் தலைநகர் டோஹாவில் ஹமாஸ் அமைப்பின் சிரேஷ்ட அதிகாரிகளைக் குறி வைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

குறித்த சம்பவத்தில் ஹமாஸ் தலைவர் கலீல் அல்-ஹய்யாவின் மகன் ஹிமாம் அல்-ஹய்யா மற்றும் அவரது அலு வலகப் பணிப்பாளர் ஜிஹாத் லபாத் ஆகி யோரே உயிரிழந்துள் ளதாகத் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

அதேவேளை இஸ் ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலை சர்வ தேச சட்டத்தின் வெளிப் படையான மீறல் என கட்டார் வெளிவிவகார அமைச்சு விமர்சித்து ள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரழிவுகளும் நில நடுக்கமும் குறித்த ஒரு பார்வை

01

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

நாம் எல்லோரும் அறிவியலின் தத்துவப்படி கூர்ப்பின் மூலமாக ஒரு கல அங்கியாக இருந்து இப்போது செவ்வாயில் விண்கலங்களை இறக்கும் அளவுக்கு தேர்ச்சி பெற்ற ஒரு உயிரினமாக, வளர்ந்து நிற்கிறோம். இந்த வளர்ச்சி முற்றுப்பெற்று விடவில்லை, இயற்கைத் தேர்வு முறையில் படிப்படியாக நாம் மாற்றமடையத்தான் போகிறோம். உயிர் என்ற ஒன்று இருக்கும் வரை மாற்றம் என்ற ஒன்று இருந்து கொண்டே தான் இருக்கும்.

பூமியில் உயிரின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு நேர்கோட்டுப் பாதையில் சென்ற ஒரு நிகழ்வு அல்ல. உயிரினக் கூர்ப்பே டி.என்.ஏ வின் பிரதி எடுப்பில் ஏற்பட்ட பிழையினால் உருவான விகாரம் என்று இன்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பக்றீரியாயாவின் இனப்பெருக்கத்தின் போது ஏற்பட்ட பிழையினால் இன்று மனிதன் இவ்வுலகில் வந்து நிற்கிறான் என்று கூட சொல்லலாம்.

## பேரழிவுகள்

பூமியை முழுதாக பாதிக்ககூடிய நிகழ்வுகள் அவ்வப்போது பூமியின் வரலாற்றில் நிகந்துள்ளது. இவ்வாறான நிகழ்வுகள் பூமியின் சமநிலையை பாதித்ததுடன், அப்போது வாழ்ந்து கொண்டிருந்த உயிரினங்களின் வாழ்வில் பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக நீங்கள் அடிக்கடி கேள்விப்பட்ட ஒன்று, டைனோசர்களின் அழிவு.


ஏற்கனவே சாகத் தொடங்கியிருந்த டைனோசர்கள் கிட்டத்தட்ட 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் விழுந்த ஒரு விண்கல் டைனோசர்களின் சவப்பெட்டியில் இறுதி ஆணி அடித்தது.

உயிரினப்பேரழிவு (extinction event or biotic crisis) என்று அழைக்கப்படும் நிகழ்வுகள், பூமியின் உயிர்ப் பல்வகைமையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வுகள் ஆகும். ஏற்கனவே சொல்லியது போல இந்தப் பாரிய பேரழிவுகள் மூலம் பூமியில் வாழ்ந்த 98 வீதமான உயிரினவகைகள் இன்று முழுதாக அழிந்துவிட்டது அல்லது இன்று படிமமாக மட்டுமே (எல்லாம் அல்ல) காணப்படுகிறது.

கிட்டத்தட்ட கடந்த 600 மில்லியன் வருடங்களில், இவ்வாறான பேரழிவுகள் 5 முறை இடம் பெற்றுள்ளது. இவை ஒவ்வொன்றைப் பற்றியும் பார்ப்போம். ஓர்டோவிசியன் சிலூரியன் உயிரினப்பேரழிவு-443 மில்லியன் வருடங்களுக்கு முன். பிந்திய டிவோனியன் உயிரினப்பேரழிவு-359 மில்லியன் வருடங்களுக்கு முன். பேர்மியன் உயிரினப் பேரழிவு-248 மில்லியன் வருடங்களுக்கு முன். ட்ரையாசிக் - யுராசிக் உயிரினப் பேரழிவு - 200 மில்லியன் வருடங்களுக்கு முன். கிரீடாசியஸ்- மூன்றாம் உயிரினப் பேரழிவு-65 மில்லியன் வருடங்களுக்கு முன்.

### ஓர்டோவிசியன் சிலூரியன் உயிரினப்பேரழிவு

உயிரினப்பேரழிவுகளில் மூன்றாவது மிகப் பெரிய அழிவு இதுவாகும். கிட்டத்தட்ட 85 வீதமான நீர்வாழ் உயிரினங்கள் அழிந்துபோயின. ஓர்டோவிசியன் காலப்பகுதியில் பெரும்பாலான உயிரினங்கள் கடலிலேயே வாழ்ந்தன. த்ரிலோபைட், ப்ரசியோபோட் போன்ற உயிரினங்களே இக்காலப்பகுதியில் பெரிமளவு வாழ்ந்த உயிரினங்களாகும்.




இரண்டு கட்டங்களாக, அதாவது சற்று இடைவெளி விட்டு இருவேறு காலப்பகுதிகளில் இந்த உயிரின அழிவு நடந்ததாக கருதப்படுகிறது. இந்த இருவேறு காலப்பகுதிக்காண இடைவெளி, குறைந்தது ஒரு மில்லியன் ஆண்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஓர்டோவிசியன் உயிரினப்பேரழிவுக்கு காரணம், அக்காலப் பகுதியில் ஏற்பட பனியுகம் ஆகும். பூமியின் தெற்குஅரைவட்டக் கோளத்தில் உருவான பனிப்படலம், கடல் மட்டத்தை வீழ்ச்சி அடையச்செய்ததுடன் கடல் நீரின் இரசாயனத் தன்மையையும் மாற்றியது. அளவுக்கதிகமான குளிரும், நீர்த் தன்மை மாற்றமும் ஓர்டோவிசியன் உயிர்ப் பேரழிவுக்கு காரணமாயின.

### பிந்திய டிவோனியன் உயிரினப்பேரழிவு

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு என்றல்லாமல், தொடர்ச்சியாக பல மில்லியன் ஆண்டுகளில் நடைபெற்ற ஒரு உயிரினப்பேரழிவாக இருக்கலாம் என்றும் ஆராய்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஆழமற்ற கடல் நீரில் வாழ்ந்த உயிரினங்கள் பெரும் அழிவை சந்தித்தன. கிட்டத்தட்ட மொத்த உயிரினங்களில் நாலில் மூன்று பங்கு உயிரினங்கள் அழிந்துபோயின. கடல் பவளத் திட்டுக்கள் மற்றும் அவை சார்ந்த உயிரினங்கள் மிகவும் மோசமாக பாதிப்படைந்தது. பவளத்திட்டுக்கள் மீண்டும் பழைய நிலையை அடைய கிட் டத்தட்ட 100 மில்லியன் ஆண்டுகளாயின.

கடல் மட்ட மாற்றம், விண்கல் மோதல், புதிய வகை தாவரங்களால் ஏற்பட்ட மண் மாற்றம் காரணமாக ஏற்பட்ட காலநிலை மாற்றம் போன்றவை இந்த உயிர்ப்பேரழிவுக்கு காரணமாக கருதப்படுகின்றன.

### பேர்மியன் உயிரினப்பேரழிவு

பூமியின் உயிரின வரலாற்றில் "பெரும் சாவு" (the great dying) என்று அழைக்கப்படும் அளவிற்கு மிகப் பெரிய உயிரின அழிவாக இருந்தது இந்த பேர்மியன் அழிவு. கிட்டத்தட்ட 96 வீதமான உயிரினங்கள் முற்று முழுதாக அழிந்து போயின. இன்று நாம் உலகில் பார்க்கும், வாழும் எல்லா உயிரினங்களும், அந்த எஞ்சிய 4 வீதமான உயிரினங்களே!

ஓர்டோவீசியன் உயிரினப் பேரழிவைப் போல பேர்மியன் அழிவும், பல மில்லியன் ஆண்டுகள் இடைவெளியில் இரு வேறுபட்ட காலப்பகுதியில் நிகழ்ந்ததாக கருதப்படுகிறது. பெரும் பாதிப்படைந்தவை கடல் வாழ் உயிரினங்களாகும். கிட்டத் தட்ட 96 வீதமான கடல் உயிரினங்கள் அழிந்துபோயின. நிலத்தில் வாழ்ந்த உயிரினங்களில் 70 வீதமானவை அழிந்தன, அதிலும் குறிப்பாக பூச்சி இனங்களே அதிக பாதிப்படைந்தன.

அதிகளவான பாதிப்பு உயிரினங்களுக்கு ஏற்பட்டதனால், மீண்டும் உயிரினங்களின் அளவு அதிகரிக்க 10 மில்லியன் வருடங்களுக்கு மேல் ஆயிற்று.

இந்த அழிவுக்கு பல்வேறு பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. சைபெரியன் நிலப் பரப்பில் இருந்து வந்த அளவுக்கதிகமான மீதேன் வாயு மற்றும் எரிமலை வெடிப்பு, பிராணவாயுக் குறைபாடு போன்றவை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில்...

யில் இளைஞன் ஒருவர் மீது நால்வர் கொண்ட குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் மாசேரிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி இளைஞன் பயணித்த கார் மீது கல் வீசித் தாக்குதல் நடத்திய நிலையில் இளைஞன் காரில் இருந்து இறங்கிய போது நால்வர் கொண்ட குழு இளைஞன் மீதும் தாக்குதல் நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் தலையில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில் இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (ம-7,30)

## ஹெரோயின்...

படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## கட்டாக்காலி...

நாய்களினால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் தொற்று நோய்களைக் கருத்திற் கொண்டு நாய்களின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பெண்நாய்களுக்கான கருத்தடை செயற்றிட்டத்தினை நல்லூர்ப் பிரதேச சபை முன்னெடுக்கின்றது.

இன்று 10 ஆம் திகதி முதல் 14 நாம் திகதி வரை நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது.

பெண் நாய்களுக்கான குறித்த இலவச கருத்தடை சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு பொதுமக்கள் அனைவரும் தங்களால் வளர்க்கப்படும் பெண் நாய்களுக்குரிய கருத்தடை சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் காணப்படும் கட்டாக்காலி பெண்நாய்களினை சமூகநலன் நோக்கில் பிடித்து நல்லூர்ப் பிரதேச சபையின் கருத்தடை சிகிச்சை முகாமில் ஒப்படைப்பவர்களுக்கு ஒரு நாய்க்கு ரூ.600 வீதம் சன்மானமாக வழங்கப்படும்.

நல்லூர் பிரதேச சபையின் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சிகிச்சை முகாம் நடைபெறும் இடங்கள்:

**10.09.2025 புதன்கிழமை**

காலை 8.30 முதல் 1.30 மணி வரை திருநெல்வேலி கம்பன் சன சமூக நிலையம்.

மாலை 1.30 முதல் 4.15 மணிவரை திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையம்.

**11.09.2025 வியாழன்**

காலை 8.30 முதல் 1.00 மணி வரை கலைச்சுடர் சனசமூக நிலையம், திருநெல்வேலி மேற்கு.

மாலை 1.30 முதல் 4.15 வரை கொக்குவில் பழைய உப அலுவலகம்.

**12.09.2025 வெள்ளிக்கிழமை**

காலை 8.30 முதல் 1.00 மணி வரை கலைமகள் சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு.

மாலை 1.30 முதல் 4.15 வரை பொது நோக்கு மண்டபம், கல்வியங்காடு.

**14.09.2025 ஞாயிற்றுக்கிழமை**

காலை 8.30 முதல் 1.00 மணி வரை உதயஒளி சனசமூக நிலையம், அரியாலை கிழக்கு. (ம-7,33)

## சர்வதேச...

வாய்ந்தது. சர்வதேச தரத்தின்படி குறித்த விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்து ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா) நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை மனித உரிமைகளுக்கான பிரித்தானிய உயர் ஆணையர் எலினோர் சாண்டர்ஸ் முன்வைத்தார்.

அதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகரின் அண்மைய இலங்கை விஜயம் மற்றும் அறிக்கைக்கு பிரித்தானியா தனது அறிக்கையில் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

மேலும் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த அரசாங்கத்தின் உறுதிப்பாடுகளை வரவேற்கும் அதே வேளை உறுதியான மற்றும் நிலையான முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களை ஒழிக்க பொதுமக்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அடிப்படை சுதந்திரங்களை கட்டுப்படுத்த தொடர்ந்து அந்த சட்டத்தை பயன்படுத்துவது குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். "இழப்பீடுகள் மற்றும் காணாமல்போனவர்களை மையமாகக் கொண்ட உள்நாட்டு நிறுவனங்களின் பணிகளை மீண்டும் ஊக்குவிக்கவும் நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

எந்தவொரு நல்லிணக்கமும் பொறுப்புக்கூறல் செயல்முறையும் உள்ளடக்கியதாகவும் விரிவானதாகவும் இருப்பது, பாதிக்கப்பட்ட சமூகங்களின் தேவைகளை மையமாகக் கொண்டிருப்பது, கடந்தகால பரிந்துரைகளை உருவாக்குவது மற்றும் சர்வதேச தரங்களைப் பூர்த்தி செய்வது மிகவும் முக்கியமாகும்'' என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

அதேநேரம் மோதல் தொடர்பான பாலியல் வன்முறை குறித்த உங்கள் அலுவலகத்தின் முக்கியமான பணியை முன்னெடுத்துச் செல்லவும் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் உயர்ஸ்தானிகரிடம் பிரித்தானியா கோரியுள்ளது.

மேலும் இந்தப் பிரச்சினை இலங்கையில் முன்னுரிமைப் பிரச்சினையாகக் கவனிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜெனிவாவில்...

சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.09.09 — சீட்டிழுப்பு இலக்கம் 5947 — H 2 0 5 3 1 5
அத சம்பத — H 5 3 1 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0522 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.09.09 — 0003 — தனுசு 03 21 26 43

தன நிதானய — திகதி - 2025.09.09 — சீட்டிழுப்பு இலக்கம் - 1977 — P 01 19 22 23 P — Double Chance

மெகா பவர் — திகதி 09/09/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2295 — E 11 25 55 62 64

ஜய — திகதி 2025.09.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0215 — E 1 0 3 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4189 — சீட்டிழுப்பு திகதி 09.09.2025 — N 16 34 62 65 — N — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.09.09 — சீட்டிழுப்பு இலக்கம் 1256 — மீனம் 03 24 47 50 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 09.09.2025 — வெற்றி வாரம் 0655 — T 1 2 0 6 0 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23.851.261.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2921 — சீட்டிழுப்பு திகதி 2025.09.09 — தினம் செவ்வாய்க்கிழமை — 08 40 44 53 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,361,910.40 — DLB

சனிதா — திகதி 09.09.2025 — வெற்றி வாரம் 5082 — 16 48 49 52 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,970,438.40 — DLB

சசிரி — வெற்றி வாரம் 0766 — சீட்டிழுப்பு திகதி 09.09.2025 — செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 17 28 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4633 — சீட்டிழுப்பு திகதி 09.09.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 03 11 16 23 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,130,505.20 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Q 11 47 53 70 75 — 2097 — 09.09.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.592,895,845.40 — DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2747 — சீட்டிழுப்பு திகதி 2025.09.09 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,826,092.00 — 27 54 58 67 T — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

SPACE FESTIVAL 2025

12 SEP

2025 FRIDAY 09.00 AM

VENUE : SLIIT NORTHERN UNI, JAFFNA



(C-3837)

மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் சங்கமம்

SPACE FEST 2025

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

021 7534 807
northernuni.lk apply@northernuni.com


## நேபாள...

சமூக ஊடகங்களுக்கு நேபாள அரசு விதித்த தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேபாளத்தில் மாபெரும் வன்முறைப் போராட்டங்கள் வெடித்துள்ளன.

நேபாளத்தில் போராட்டக்காரர்கள் நேற்று காத்மண்டுவில் உள்ள உயர் நீதிமன்றத்திற்கும் தீ வைத்துள்ளனர்.

அத்துடன் போராட்டக்காரர்கள் பாராளுமன்ற கட்டிடம் மற்றும் பிரதமரின் வீட்டிற்கும் தீ வைத்து பல கட்டிடங்களை அழித்துள்ளனர்.

இந்நிலையில், நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் பதவி விலகிய சிலமணி நேரங்களில் நேபாள ஜனாதிபதி ராம் சரண் பவ்டெலின் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டவர்களில் அமைச்சர்களும் அடங்குவர் என்றும், மோதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கு உத்தரவையும் மீறி நடத்தப்பட்ட போராட்டங்களின் போது, பிரதமர் ஒலியின் வீடு, ஜனாதிபதி ராம் சரண் பவ்டெலின் வீடு, நேபாள ஆளும் காங்கிரஸ் கட்சியின் அலுவலகம் மற்றும் பிற அரசியல்வாதிகளின் வீடுகளும் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

அதன்பிறகு, நேபாள பாராளுமன்ற வளாகத்திற்குள் பலவந்தமாக நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்குள்ள கட்டிடங்களுக்கும் தீ வைத்தனர்.

நேபாள அரசாங்கத்தின் அமைச்சர்களின் அலுவலகங்களைக் கொண்ட சிங்கா தர்பார் கட்டிடத்திற்கும் போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

இதற்கிடையில், நாட்டின் விமான நிலையமும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

26 சமூக வலைத்தளங்களைத் தடை செய்யும் அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக, தலைநகர் காத்மண்டுவில் உள்ள பாராளுமன்றத்தின் முன் நேற்று முன்தினம் போராட்டங்கள் தொடங்கி இரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை முன்னாள் பிரதமரின் வீட்டுக்குப் போராட்டக்காரர்கள் தீயிட்டதில் அவரது மனைவி தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். (முன்னர் கிடைத்த செய்திகள் உள்ளே) (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3841)

076 825 7716 (ஆகாஸ்)



IELTS
New Batch ஆரம்பம்
(Academic - General and Life Skill A1)
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
By: B.Murali -
077 798 9830
(5369)



2025 A/L மாணவர்கட்கு...
2015 - 2024 வரை
Physics Full
Past paper Class
Zoom Or நேரடியாக இணைய முடியும்
T.Jinthujan
(B.Sc Electronics AT
Following university of Colombo)
T.P : 076 603 4895
(5371)
N.E.C - யாழ். பெருமாள் கோவிலடி
திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 6.00 - 7.20 Pm



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3840)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள்
விரைவு பொதிகள் சேவைகள்
விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-3840)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல உயர்தர சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- தேநீர் தயாரிப்பவர் (ஆண்)
- சிற்றுண்டிகள் தயாரிப்பவர் (ஆண்/பெண்)

(5355)

070 664 7466, 077 469 6695



பணிப்பெண் தேவை

நன்றாக உணவு சமைப்பதிலும் வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண், யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்யத் தேவை.

தொடர்புகளுக்கு :

076 287 81 57
(1537)



SB TRAVELS AND TOURS PVT LTD

சகல நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களை குறைந்த விலையிலும் யாழ்ப்பாணம், கொழும்பிலிருந்து இந்தியாவிற்குச் செல்ல Rs.37,900 மற்றும் கனடா Return Ticket Rs.398,000 ஐரோப்பிய நாடுகளுக்குமான Return Ticket Rs.260,000 இருந்தும்,இந்தியா விசாக்களும் செய்து தரப்படும்.
(C-3838)

யாழ்ப்பாணம் : 021 2228 555, 076 691 1082
கொழும்பு : 011 244 6666, 077 108 3480
இணையத்தளம் : www.sbtravels.lk (Conditions apply)



அறைகள் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கு அருகில் இராமநாதன் வீதியில் அமைதியான சூழலில் அறைகள் மாத வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும்)
(1535)

077 208 7778



REECHA PAPERS (PVT) LTD

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள கடதாசி உற்பத்தி மற்றும் பொதியிடும் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

தொழிற்சாலை பணியாளர் பணிநிலை வேண்டுகை
1. Machine Operator (இயந்திர இயக்குனர்)
2. Pulp Operator
3. Packing Assistant (பொதி செய்பவர்)

அடிப்படைத் தகுதிகள்
- 01 09.2025 இல் 18 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- உயர்தரம் கற்றிருத்தல் மேலதிக தகுதியாக கருதப்படும்.
- 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பயிற்சி வழங்கப்படும்.

(1536)

தகுதியானவர்கள் 10.09.2025 தொடக்கம் 26.09.2025 வரை கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு நேர்முகத்தேர்வுக்கு சமூகம் தரவும்.

தொடர்புக்கு :
077 756 1639, 077 315 1654

இடம் : REECHA PAPERS (PVT) LTD,
கைத்தொழிற்பேட்டை அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.



வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வரவேற்பாளர்கள் தேவை.
(5330)

076 830 3931



உடன் விற்பனைக்கு

01.யாழ். K.K.S வீதியில் சிவன்கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 150 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட ஆறு பரப்புக் காணியும்,
02.யாழ். விக்டோரியா வீதியில் விக்டோரியா வீதி முகப்புடன் 16 பரப்பு, 14 பரப்பு, 12 பரப்பு, 10 பரப்புக் காணிகளும்,
03.யாழ். நல்லூர் குறொஸ் வீதியில் 12 பரப்புக் காணியும் ஆறு பரப்புக் காணியும்,
04.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
05.யாழ். பிறவுண் வீதியில் வலம்புரி காரியாலயத்திற்கு அண்மையில் பிறவுண் வீதி முகப்புடன் 30 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட காணித்துண்டு உடன் விற்பனைக்கு.
(C-3842)

077 723 2535



காணி/கட்டடம் வாடகைக்கு தேவை

தனியார் குழு வகுப்புக்களை நடத்தக் கூடிய வெறும் காணி/ வீட்டுடன் கூடிய/ கட்டடத் தொகுதி (கீழ்/மாடி) வாடகைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும். பெருமாள் கோவில் அண்மித்து/ பிறவுண் வீதி - நாவலர் வீதி சந்திக்கு அண்மையில் விரும்பத்தக்கது.
(5371)

076 603 4895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.